

புதுக்கோட்டை மாநகர தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையிலும், மாநகர செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையிலும் புதுக்கோட்டை நகர் மன்றத்தில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, சிறப்புரையாற்றினார். நிகழ்வில் இளம் பேச்சாளர் சொ.தமிழினியன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் சட்டப் போவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், அரு.வீரமணி, த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், சு.சண்முகம், என்.சாத்தையா, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், நூத்தப்பூர் கிராமத்தில் நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாம் நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி. கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், எஸ்.கே.எஸ்.மருத்துவமனை அதிபர் டாக்டர் செ. செங்குட்டுவன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

நான்கூட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரம் இல்லாமல் பேசமாட்டார் என்று பொறுமையாக இருந்தேன். ஆனால், இப்போது நான் விவரத்தைக் கேட்டு ஆதாரத்தோடு சொல்கிறேன். நாடாளுமன்றத்திலே எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக இதை எதிர்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அங்கே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில், அந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கக்கூடிய மூர்த்தி அவர்கள் நேரடியாகச் சென்று, அந்தப் போராட்டத்தின் தன்மையைப் பற்றி அறிந்துகொண்டு, "போராட்டத்தை நிறுத்துங்கள்; எங்கள் அரசு உங்களுக்கு ஆதரவாக இருக்கும்" என்று சொன்னார். அதோடு, இது தொடர்பாக முதலமைச்சர் அவர்களும் இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்று சொல்லி, சட்டமன்றத்தில் இது குறித்து தீர்மானம் கொண்டு வரப்போகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடத்தில் சொல்லி, அதற்குப் பிறகுதான் இந்தத் தீர்மானம் இங்கு வந்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு வேகமாகப் பேசிவிடுகின்ற காரணத்தால் ஏதோ சாதித்துவிட்டோம் என்று நீங்கள் நினைத்துவிட வேண்டாம். நிச்சயமாகச் சொல்கிறேன்; உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் அவ்வப்போது தொடர்ந்து கடிதம் எழுதியிருக்கிறோம்; எங்களுடைய கண்டனக் குரலை நாடாளுமன்றத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல; போராட்டக்களத்தில் ஈடுபட்டிருப்பவர்களிடத்தில்கூட நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, சட்டமன்றம் கூடுகின்ற போது இதுபோன்ற ஒரு தீர்மானத்தை அவையில் கொண்டு வருவோம் என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதோடு, ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதுகின்றபோது, அதுதொடர்பான செய்தி வெளியீடுகளில் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக கடிதம் எழுதியிருக்கிறார் என்கிற செய்தியெல்லாம் விவரமாக வந்திருக்கிறது. ஆனால், நீங்கள் இதுகுறித்து தெரியவில்லை, தெரியவில்லை என்று பேசினால், என்ன அர்த்தம்?

நாடாளுமன்றம் கூடி, கூடி கலைந்துகொண்டிருக்கிறதே தவிர, அங்கே தொடர்ந்து அவை நடவடிக்கைகள் நடந்ததாக நமக்கு இதுவரையில் செய்தி வரவில்லை. ஆனால், கிடைத்த நேரத்தைப் பயன்படுத்தி, அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம். நாடாளுமன்றம் கூடுகிறது; ஆனால், அவையை ஒத்திவைக்கிற சூழ்நிலைதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறதே தவிர, தொடர்ந்து அவை நடக்கவில்லை. இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையில் படித்திருப்பார் என்று நினைக்கிறேன்.

அப்போது எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம்; எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று தவறான தகவலை நீங்கள் இங்கே பதிவு செய்கிறீர்கள். அதையும் நான் தெளிவுபடுத்திவிட்டேன். எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம்; தி.மு.க. சார்பில் அங்கே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம்.

சட்டம் நிறைவேறியது என்றால், அது எங்களுடைய ஆதரவில் நிறைவேறவில்லை. நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம். அது நாடாளுமன்றத்தில் பதிவாகியிருக்கிறது. எப்படி நாங்கள் அதைத் தடுக்க முடியும்? Majority அவர்கள் இருக்கும்போது, அதை எப்படிச் செய்யமுடியும் என்று சொல்லுங்கள். நீங்களும் சில பிரச்சினைகளில் அங்கே குரல் கொடுத்தோம்; குரல் கொடுத்தோம் என்று பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். அப்போதெல்லாம் நிறைவேற்றிய தீர்மானத்தை உங்களால் தடுத்துவிட முடிந்ததா? சொல்லுங்கள்.

ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியை தருவதற்கான வாய்ப்பே கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் முடிவு.

மறுபடியும் ஆரம்ப காலக்கட்டத்திலிருந்து என்று, ஆரம்பத்திற்குப் போய்விட்டார். திரும்பத் திரும்ப ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வந்தால் அதைத் தடுத்தே தீருவோம். திரும்ப, திரும்பச் சொல்கிறேன். நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற வரையிலே, நிச்சயமாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏன் இவ்வளவு கால தாமதம்?" என்று மீண்டும் மீண்டும் கேட்கிறார். அவர்கள் பார்வையில் அப்படியிருக்கலாம்; அல்லது நாம் தவறிவிட்டோம் என்றுகூட இருக்கலாம். ஆனால், எங்களுடைய பார்வையில் அவ்வப்போது நாங்கள் இந்தப் பிரச்சினையை ஒன்றிய அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்; கடிதம் எழுதியிருக்கிறோம்.

அதனால்தான் திரும்ப, திரும்பச் சொல்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டிற்குள் ஒன்றிய அரசால் போடப்படக்கூடிய இந்தத் திட்டம், நிச்சயம் வரக்கூடிய வாய்ப்பு இருக்காது, அதைத் தடுத்து நிறுத்துவோம். அப்படி ஒரு சூழல் வந்தால் இந்தப் பொறுப்பில் நான் இருக்கமாட்டேன்; முதலமைச்சர் பொறுப்பில் இருக்க மாட்டேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தயவுகூர்ந்து மீண்டும், மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே எல்லாக் கட்சித் தலைவர்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். எனவே, நீங்களும் அதை ஆதரித்து ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய துரை முருகன்; திட்டத்தை தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்று சட்டப்பேரவையிலேயே முதல்வர் பிரகடனப்படுத்தி யிருக்கிறார். முதல்வர் ஸ்டாலின் தெளிவாக சொல்லிவிட்டார், இனியும் தொடர்ந்து பேசுகிறீர்கள் என்றால், நீங்கள் வேதாந்தா நிறுவனத்துடனேயே பேசிவிடலாம் என்று கூறினார்.

அதனை தொடர்ந்து டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிரான தமிழக அரசின் தனித் தீர்மானத்திற்கு அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். அதனை தொடர்ந்து அரிட்டாப்பட்டி டங்க்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முயற்சிக்கு எதிரான தனித்தீர்மானம் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.



சேலம் மாநகரம் கிச்சிப்பாளையம் பகுதி தி.மு.க சார்பில். கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்ததின பொதுக்கூட்டத்திற்கு பகுதிக் கழகச் செயலாளர். கே.ஜெய் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில். தலைமைக் கழகப் பேச்சாளர். நாஞ்சில் சம்பத். மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன். இளம் பேச்சாளர் ரகுநாத். ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார். மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர். சி.ராஜேந்திரன். மாநகர கழக நிர்வாகிகள். பா.ரகுபதி. வி.கணேசன், எம்.எம். ஷெரீப், கோட்டக் கழகச் செயலாளர்கள். ஜி. வெங்கடேசன், சத்யன்.செந்தில் சங்கர், ஆறுமுகம். பகுதி துணை செயலாளர்கள் மாது, பாலன்.நந்தகுமார். அண்ணாமலை. தனலட்சுமி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அறந்தாங்கி மேற்கு ஒன்றியத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

### நலத்திட்ட உதவிகள் வழங்கி அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை,டிச.11- புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் எரிச்சி சிதம்பர விடுதியில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா எரிச்சி சிதம்பர விடுதியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமை தாங்கினார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அனைவரையும் வரவேற்று,சிறப்புரையாற்றினார்.நிகழ்வுகளில்தலைமை கழக பேச்சாளர்கள்

கரூர் முரளி, சுமித்ரா, சரண்யா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மேலும் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றிய கழக செயலாளர்கள் எல்.குமார் (எ) துரைக் கண்ணு, கே.எஸ்.ரவி, மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே.சி. சிவக்குமார், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆதி. கருணாநிதி, மெ.மூர்த்தி, மெ.ரவிச்சந்திரன்,இரா.நிறைவுஅண்ணா, வாசுகி அன்பரசு, ச.பாலு, பி.சி.எம்.முருகன்,எம்.எம். குமார்,தங்க.நல்லகூத்தன், பொன்னுச்சாமி, சத்தியமூர்த்தி, பழ சோமு, வீரசெல்வம்,ரவிச்சந்திரன், பாண்டியன், அறந்தாங்கி ராமசாமி, கே.கே. கணேசன், ராஜேஸ்வரி செல்வம், அன்பரசு, சேகர், பாலு மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் அறந்தாங்கி மேற்கு ஒன்றிய தி.மு.க. அவைத் தலைவர் மே. கருணாநிதிநன்றிகூறினார். கூட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்வழங்கப்பட்டது.



கண்டமங்கலம் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.வி..இளமாறன் அவரது இல்ல புதுமனை புகுவிழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு வாழ்த்தினார். பின்னர் அவரது புதிய இல்லத்தில் கழக கொடியினையேற்றினார்.மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய செயலாளர் வே.கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, பேரூர் செயலாளர் பா ஜீவா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ், பிரவின், மாவட்ட பிரதிநிதி செந்தில், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜாத்தி, கிளைச் செயலாளர்கள் ஜெயக்குமார், நாகராஜன், ஒன்றிய மாணவர் அணி சத்தியமூர்த்தி, விளையாட்டு மேம்பாட்டு அணி கலைராஜன், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வீர.மணிகண்டன், அரவிந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி**

**டிசம்பர் 11 (2009)**



**முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.**

**1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.**

**"சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**